1972 ஆகஸ்ட் 19]

நம்முடைய மாநிலத்திலும் கொண்டுவருவதுபற்றித் தான் யோசனை செய்யப்படுகிறது. இப்போதுள்ளது எல்லாம் படிப்புக் காலத்தை 11-2-2 என்று அமைப்பதா, 10-2-3 என்று அமைப்பதா என்பதாகும். பல்கலைக் கழகத் துணைவேந்தர்களை எல்லாம் அரசு கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வரும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே பி.யு.சி. யிலேயே இடம் கிடைக்காத நேரத்தில் இண்டர்மீடியட் இரண்டு ஆண்டு என்று கொண்டு வருவதானது பெரும் நெருக்கடியை ஏற் படுத்தும் என்பதாக சமீபத்தில் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தம்முடைய கருத்தை தெரிவித்திருக்கிறார்களே, இதுபற்றி ஏதாவது யோசிக்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைத்தான் முன்பு குறிப்பிட்டேன். ஒவ்வொரு பல்கலைக் கழகமும் ஒவ்வொரு விதமான கருத்தைச் சொல்கிறார்கள். இப்படி தனித்தனியாக கேட்பதைவிட எல்லோரையும் சேர்த்து வைத்துக்கொண்டு, டாவ் கோர்ஸ் ரிப்போர்ட்டையும் வைத்து பொதுவாக, ஒரு முடிவுக்கு வரும் நடவடிக்கையைத்தான் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்

* 184 வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 22—4—1971-ல் நடந்த வட ஆர்க்காடு மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்தில், ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் பணியாளர்களை ஒன்றியங்களுக்கிடையே மாவட்ட அளவில் மாற்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்கே முழு அதிகாரம் அளிக்க வேண்டுமென்று அரசைக் கோரி தீர்மானித்துள்ளதா?

(இ) ஆம் எனில். அதன் பேரில் அரசு எடுத்த முடிவு என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை. ஆனால், திருச்சிராப்பள்ளி தெற்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டம், வட கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் அரசாங்க ஊழியர்களை மூன்று

1972 ஆகஸ்ட் 19]

வருடங்களுக்கு ஒரு முறை அவசியம் ஏற்படும்பொழுது மாற்றம் செய்வதுபோல ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஊழியர்களையும், நிர்வாகம் நன்கு செயல்பட நிர்வாக அடிப்படையில் அவசியம் ஏற்படும்பொழுது ஒரு ஒன்றியத்திலிருந்து வேருெரு ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்ற மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என அரசைக் கோரி தீர்மானங்கள் அனுப்பி உள்ளன.

(இ) இத் தீர்மானங்கள் பேரில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்தப் பொருள் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : இப்படி இந்தப் பணியாளர்களை மாற்றுகிற அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் தருவதைப் போன்று ஆசிரியர்களை மாற்றுகிற அதிகாரத்தை கல்வி அதிகாரிகளிடத்திலேயே தருகிற செயற்குறிப்பு அரசாங்கத்தினிடம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி முடிவு செய்ய முன்பு அட்ஹாக் கமிட்டி இருந்தது. அது இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி தலைவர்களைக் கலந்து கொண்டு எத்தகைய முடிவை எடுக்கலாம் என்பது பற்றி அரசு தீர்மானிக்கும் என்று முதல்வர் தெரிவித்திருக்கிருர். இது ஓரிடத்தில் இருந்து மற்ருெரு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று சொன்னுல் ஒன்றியங்களின் சம்மதத்தை, நகராட்சி மன்றங்களின் சம்மதத்தை பெற்றே மாற்ற வேண்டியதாக இருக்கிறது. சம்மதம் பெறுவதில் பலவிதமான இடையூறுகள் வந்துவிடுகின்றன. அங்கேயே தங்களை இறுத்திக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவிடுகின்றன. ஆகவே அதிகாரிகள் மட்டத்திலேயே மாற்றம் பற்றி தீர்மானிக்க தலைவர்களைக் கலந்துகொண்டு விரைவில் தக்கதொரு முடிவு எடுக்கப்படும்.

Buildings for Panchayat Union Councils in Kanyakumari district

* 185 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of Panchayat Unions for which Council Halls have been constructed so far in Kanyakumari District; and

(b) the details of the cost of construction of these halls?